# அக்ஷய த்ருதியை அன்று ஒரு அற்புதமான ஏற்பாடு

வரும் 10/5/2024 அன்று அக்ஷய த்ருதியை மிகவும் புனிதமான நாள். க்ருதயுகம் ஆரம்பமானதும், பரஶுராமர் அவதாரம் செய்ததும், பகீரதன் கங்கையை பூமியில் நதியாக ஓடச்செய்ததும் அக்ஷய த்ருதியையில்தான். இந்த தினத்தில் செய்யும் நல்ல கார்யங்கள் முழுமையான பலனைத்தரும். இதில் வித்யாரம்பம், மந்த்ரங்கள் உபதேஶம் பெறுதல், தான தர்மங்கள் செய்வது, அன்னதானம், ஜலத்துடன் பாத்ரம், நீர்மோர், தேங்காய், விசிறி, குடை, பாதரக்ஷை, படுக்கை, தானம் செய்வது விஶேஷமான பலன்களைக் கொடுக்கும். புண்ய தீர்தங்களில் ஸ்நானம், விசேஷ பூஜைகள் ஹோமங்கள் செய்வதும், மூல மந்த்ர ஜபங்கள் செய்வதும் மேன்மை தரும்.

புண்ணியமில்லாமல் வாங்கும் பொருள் ஆசையை மட்டும்தான் வளர்க்கும். தங்கம் வாங்குவதால் லக்ஷ்மீ வீட்டிற்கு வருகிறாள் சரி, அதில் கொஞ்சம் தானமாக கொடுத்தால் விஶேஷமான புண்யமும் கிடைக்குமே! அதை தானமாக கொடுப்பது எல்லோராலும் முடியுமா?.

ஒரு கிராம் தங்கம் வாங்கும் விலையைவிட குறைந்த செலவில் ஒரு மூட்டை அரிசி வாங்கி வேதம் படிக்கும் மாணவர்களுக்கு அதிலிருந்து மூன்றில் இரண்டுபங்கு தானமும் கொடுத்து ஒரு பங்கை பூஜைசெய்து ப்ரஸாதமாக மஹாலக்ஷ்மீயை நம் குடும்பத்திற்கு கொண்டு வருவது எவ்வளவு புண்யம். இதற்கு ஒரு ஏற்பாடு செய்திருக்கிறோம். தெய்வ அருளாலும் ஸ்ரீ ஆசார்யாள் அனுக்ரஹத்தாலும், ஸ்ரீ வேத வித்யா குருகுலம் வேத பாடசாலை (தஞ்சாவூருக்கு அருகில் களஞ்சேரியில்) கடந்த இருபத்தாறு ஆண்டுகளாக நடந்து வருகின்றது. இதில் 45 மாணவர்கள் வேதம் படிக்கிறார்கள் இவர்களுக்கு செய்யப்படும் அன்னதானம் மிகவும் உயர்வானது. பாடசாலையில் மாணவர்களுக்கு அன்னதானத்திற்கு 1800 ரூபாய் (30 கிலோ அரிசிக்கு) அனுப்பினால் பெற்றுக்கொள்கிறோம் அதற்கு அக்ஷய த்ருதீயை அன்று களஞ்கேரியில் ஆயுஷ்ய ஸூக்த, ஓஷதி ஸூக்த, பூ ஸூக்த, ஸ்ரீ ஸூக்த, பாக்ய ஸூக்த ஜபங்கள், லக்ஷ்மீகுபேர மூலமந்த்ர ஜபங்கள் செய்து ப்ரஸாதமாக நமது களஞ்சேரி ரிஷி க்ருஷியால் இயற்கையாக விவசாயம் செய்து விளைவிக்கப்பட்ட ஶுத்தமான சாப்பாட்டு அரிசி பூஜிக்கப்பட்டு 10 கிலோ அனுப்பி வைக்கிறோம்.

ஸ்ரீ காஞ்சி ஆசார்யாளின் அனுக்ரஹத்துடன் நாம் ஏற்பாடு செய்திருக்கும் இந்த வேத பாடஶாலைகளுக்கு அன்னதானத்திற்கு அரிசி அனுப்பும் திட்டம் நம் பரமாசார்யாள் ஆரம்பித்த பிடி அரிசி திட்டத்தின் ஒரு வடிவமாக அமைந்துள்ளது, என்று ஸ்ரீஆசார்யாள் நாம் நேரில் தெரிவித்தபோது மிகவும் ஸந்தோஷப் பட்டார்கள். அன்னதானம் தினமும் செய்யவேண்டிய ஒன்று. ஆஸ்தீகர்கள் இந்த அக்ஷய த்ருதீயை புண்ய காலத்தில் அன்னதான கைங்கர்யத்தில் சேர்ந்து கொண்டு ஆசார்யாளின் பூர்ணமான அனுக்ரஹத்தை அடைய ப்ரார்திக்கிறோம். **1800 ரூபாய்தான் அனுப்பவேண்டும் என்று நிர்பந்தமில்லை, உங்கள் சக்திக்கு ஏற்ப முடிந்ததை அனுப்பலாம். அதற்கான அரிசியை மூன்றாக பிரித்து இரண்டு பாகம் வேத பாடசாலைக்கும், ஒரு பாகம் உங்களுக்கும் பிரசாதமாக கொரியர் மூலம் அனுப்பி வைக்கிறோம்.**

அக்ஷய த்ருதீயை அன்னதானத்திற்கு தொகையை MO/DD/ Cheque மூலம் (Payable at Thanjavur ) **Your Family Friend** என்ற பெயருக்கு அனுப்பவும். அல்லது Indian Overseas Bank, Saliyamangalam Branch, **Your Family Friend** என்ற பெயருக்கு Current A/c No **13630200005555, (IFSC Code IOBA0001363)** நேரடியாகவே அனுப்பி விடலாம் Bank challan copy / Internet remittance advice copy யையும் உங்கள் தெளிவான போன்நம்பர் மற்றும் முகவரியுடன் எங்களுக்கு மறக்காமல் அனுப்பி வைக்கவும். எங்கள் முகவரி Your Family Friend, 2/205,Agraharam, Kalancheri-(Post), Thanjavur-613504. TamilNadu. அல்லது **whats App. 6374504417,** மொபைல் 9626636650, 9626637780, 9626637790. (10 a.m. 6 p.m.)

அநேகநமஸ்காரம்

**ஜீ. கே. ஸீதாராமன்**

**paytm, Googlepay & Phone Pe ல் பணம் அனுப்ப phone no. 7639588146.**